**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 127/2022
Prosecution witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஐயப்பன் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஸ்ரீவைகுண்டத்தில் குடியிருந்து அரசு மதுபான கடையில் பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னை காவல் நிலையம் வரவழைத்து எழுதப்பட்ட ஒரு தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் 15.01.2020 அன்று பகல் 12 மணியளவில் அடைக்கலாபுரம் புறவழிச்சாலை மதுபானகடையில் நானும் மேற்பார்வையாளர் கண்ணன் என்பவரும் மதுபான கடையை திறந்து வியாபாரம் பார்த்து கொண்டிருந்த போது வரிசையில் நின்றுகொண்டிருந்த ஆஜர் எதிரிக்கும் இறந்து போன

லட்சுமணன் என்பவருக்கும் தகராறு ஏற்பட்டு வாய் தகராறு முற்றிய நிலையில் ஆஜர் எதிரி அருகில் இருந்த உடைந்த பீர் பாட்டிலை எடுத்து இறந்து போன லட்சுமணனின் கழுத்தில் குத்தியதாகவும் இரத்தம் பீறிட்டு வெளியே வந்ததில் லட்சுமணன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாகவும் அது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District & Sessions Judge,
Thoothukudi.